**Dated : 12.03.2026** (நேரம் : நண்பகல் 12.45 மணி)

**MCOP. No: 120/2025**

**ம.சா. 1 திரு. பிரசாத்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

நான் நிரூபண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியும். நான் தினக்கூலியாக ரூ.600/– வீதம் சம்பாதித்து வருவதாக காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் தினக்கூலியாக ரூ.600/– வீதம் சம்பாதித்து வருவதாக கூறுவது உண்மை இல்லை என்றும், அதனால் தான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.10 அறிக்கைக்கான ஸ்கேன் 23.07.2022ம் தேதி எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த எலும்பு முறிவு தற்போதும் சரியாகமால் உள்ளது என்று காட்டுவதற்கு தற்போதைய ஸ்கேன் மற்றும் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், அதனால் தான் தற்போது எந்தவித ஸ்கேனும் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரே TN 65 AJ 3326 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை ஓட்டி வந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு ஆட்டோ ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இராமநாதபுரம், அரசு மருத்துவமனையில் 25.07.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாக காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் விவசாயம் வேலை செய்கிறேன், விவசாய வேலை

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:54:29 +0530

இல்லாத சமயம் தினக்கூலிக்கு வேலைக்கு செல்கிறேன். விபத்து சமயம் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், அதனால் தான் முன்புபோல் நான் தினக்கூலிக்கு வேலைக்கு செல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எதிரே ஆட்டோவை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரர் சரியான திசையில் தான் வந்தார் என்றும், நான் தான் இருசக்கர வாகனத்தில் தவறான திசையில் சென்று ஆட்டோவின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் எனக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்களல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.12 16:54:38 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.